# அரச நிதி*

தற்காலிகத் தரவுகளின்படி 1988 இற்கான வரவு செலவுத் திட்டம் தொடக்கத்தில் எதிர்பார்க்கப்பட்ட ரூ. 56,770 இலட்சம் (மொ.உ.உ. யில் 2.5 சதவீதம்) கொண்ட மிகைக்கு மாறாக ரூ. 60,310 இலட்சம் (மொ.உ.உ. யின் 2.7 சதவீதம்) கொண்ட நடைமுறைக் கணக்குக் குறையொன்றினைக் காட்டியது. இதேவேளை இவ்வாண்டின் மொத்த வரவு செலவுத் திட்டத் தொழிற்பாடுகள் ஒப்புதலளிக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இலக்கிடப்பட்ட ரூ. 263,090 இலட்சத்திற்கு (மொ.உ.உ. யின் 11.6 சதவீதம்) எதிராக ரூ. 338,540 இலட்சம் (மொ.உ.உ. யின் 15 சதவீதம்) கொண்ட குறையினை (கொடைகளுக்கு முன்னர்) விளைவித்தன. இதனைத் தொடர்ந்து, குறையினை நிதியிடுவதற்காக விரிவாக்க மூலங்களிலிருந்தான மூலவளப் பயன்பாடு தொடக்கத்தில் மதிப்பிடப்பட்ட ரூ. 25,760 இலட்சத்திலிருந்து (மொ.உ.உ. யின் 1.1 சதவீதம்) ரூ. 90,780 இலட்சத்திற்கு (மொ.உ.உ. யின் 4.1 சதவீதம்) அதிகரித்தது. இதனால் 1988 இல் இறைச் செயலாற்றம் இவ்வாண்டுக்கான தொடக்க மதிப்பீடுகளிலிருந்து கணிசமான விலகலைக் காட்டியது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1988 இல் இறைச் செயலாற்றம் கணிசமான பின்னடைவினைக் காட்டியது. 1987இல் ரூ. 25,850 இலட்சம் (மொ.உ.உ. யின் 1.3 சதவீதம்) மிகையினை உருவாக்கிய நடைமுறைக் கணக்கு 1988 இல் ரூ. 60,310 இலட்சம் குறையை (மொ.உ.உ. யின் 2.7 சதவீதம்) உருவாக்கியது. வரவு செலவுத் திட்டக் குறை 1987 இன் (கொடைகளுக்கு முன்னர்) ரூ. 217,490 இலட்சத்திலிருந்து (மொ.உ.உ. யின் 11 சதவீதம்) 1988 இல் ரூ. 338,540 இலட்சத்திற்கு (மொ.உ.உ. யின் 15 சதவீதம்) அதிகரித்தது. 1988 இல் இறைத் தொழிற்பாடுகளும் குறையினை நிதியிடுவதற்கு வங்கிக் கடன்பாடுகளில் அதிகளவு தங்கியிருந்தமையைக் காட்டின. வங்கித்தொழில் மூலங்களிலிருந்தான நிதியிடல் 1987 இன் ரூ. 35,410 இலட்சத்துடன், (மொ.உ.உ. யின் 1.8 சதவீதம்) ஒப்பிடுகையில் 1988 இல் ரூ. 90,780 இலட்சமாக (மொ.உ.உ. யின் 4.1 சதவீதம்) விளங்கியது.

1988 இல் இறை வெளிப்பாட்டின் வீழ்ச்சிக்குப் பல காரணிகள் காரணமாக விளங்கின. முதலாவது மெதுவான பொருளாதார வளர்ச்சியினாலும் நாட்டில் நிலவிய அமைதியற்ற நிலைமைகளினாலும் தயாரிப்பு நடவடிக்கைகளின் மீதான மொத்த விற்பனை வரிகள், புகையிலை மீதான கலால் தீர்வைகள், வருமான வரிகள் போன்ற பல வருமான மூலங்களிலிருந்தான சேகரிப்புக்கள் குறைவடைந்தன. இரண்டாவது தனியாட்களின் சம்பளங்கள், வட்டிக் கொடுப்பனவுகள், உணவு முத்திரைகள், வரட்சி நிவாரணங்கள், பாதுகாப்பு தொடர்பான செலவுகள் என்பன அரசின் நடைமுறைச் செலவுகளில் கணிசமானளவு அதிகரிப்பை விளைவித்தன. மூன்றாவது உணவு கொள்வனவும் வழங்கலும் கணக்கின் கீழ் முற்பணக் கணக்கின் தொழிற்பாடுகள் அரச செலவினத்தில் கணிசமான அதிகரிப்பினை விளைவித்தன. புத்தாக்க, புனர் நிர்மாண வேலைகளில் உயர்ந்த வீதமான குறைச் செலவு காணப்பட்டபோதும் மூலவளக் கட்டுப்பாட்டிற்கு அதிக கவனம் செலுத்

---

* அரசின் கணக்குகள் இன்னும் பூர்த்தியடையவில்லை. இப்பகுதியிலுள்ள பகுப்பாய்வு, இவ்வறிக்கை தயாரிக்கப்படும்போது கிடைக்கக்கூடியதாகவிருந்த தற்காலிகத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டது. கூடியளவு நிறைவான தரவுகளை அடிப்படையாகக் கொண்ட பகுப்பாய்வொன்று 1988 இன் பொருளாதார மீளாய்வில் வெளியிடப்படும்.

தப்படாது, நடைமுறையிலுள்ள செயற்றிட்டங்களுக்குப் பெருந்தொகையான துணை மூலதன ஒதுக்குச் செலவுகள் அனுமதிக்கப்பட்டன.

இவ்வபிவிருத்திகளின் கூட்டு விளைவு யாதெனில் வரவு செலவுத் திட்டப் பற்றுக்குறையை 1987 இன் மொ.உ.உ. இன் 11 சதவீதத்திலிருந்து 1988 இல் மொ.உ.உ. இன் 15 சதவீதத்திற்கு அதிகரித்து மூலவள இடைவெளியினை நிரப்பு வதற்கு வங்கித்தொழில் முறையிலிருந்து பெருமளவு மூலவளங்களைப் பயன்படுத்து வதனை அவசியமாக்கியதாகும்.

இறை வெளிப்பாடு

தற்காலிகத் தரவுகளின்படி, 1988 இல் அரசின் அரசிறை ரூ. 421,490 இலட்சமாக விளங்கிய வேளையில் நடைமுறைச் செலவு ரூ. 481,800 இலட்சமாக விளங்கியது. இதன்படி வரவு செலவுத் திட்டத்தின் நடைமுறைக் கணக்கு முன்னைய ஆண்டின் ரூ. 25,850 இலட்சம் கொண்ட மிகைக்கு மாறாக 1988 இல் ரூ. 60,310 இலட்சம் கொண்ட குறையினைப் பதிவு செய்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தி தொடர்பாக அரசின் அரசிறை 1987 இன் 21.4 சதவீதத்திலிருந்து 1988 இல் 18.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியுற்ற வேளையில் நடைமுறைச் செலவு 20.1 சதவீதத்திலிருந்து 21.6 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. இதனால் 1988 இல் நடைமுறைக் கணக்கு நிலுவையில் ஏற்பட்ட வீழ்ச்சி அரசிறை குறைவடைந்தமை யினதும் செலவு அதிகரித்தமையினதும் கூட்டு விளைவாகும். நலிவுற்ற அரசிறைச் செயலாற்றத்தைப் பிரதிபலிக்கும் வகையில் வரி/மொ.உ.உ. விகிதம் 1987 இன் 17.9 சதவீதத்திலிருந்து 1988 இல் 16 சதவீதத்திற்கு வீழ்ச்சியுற்ற வேளையில் வரியல்லா அரசிறை/மொ.உ.உ. விகிதம் 3.6 சதவீதத்திலிருந்து 2.9 சதவீதத் திற்கு வீழ்ச்சியடைந்தது. இதேவேளை சம்பளங்கள், கூலிகள் மீதான நடைமுறைச் செலவு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதாசாரமாக, 1987 இன் 4.1 சத வீதத்திலிருந்து 1988 இல் 4.5 சதவீதத்திற்கு அதிகரித்தவேளை வட்டிக் கொடுப் பனவுகள் 5.2 சதவீதத்திலிருந்து 5.7 சதவீதமாக உயர்வடைந்தன. மொத்த உள்நாட்டு உற்பத்தி தொடர்பான மாற்றல் கொடுப்பனவுகளும் 1987 இன் 5.6 சதவீதத்திலிருந்து 1988 இல் 6.1 சதவீதத்திற்கு உயர்வடைந்தன.

1988 இல் உயர்வான வெளிநாட்டு உதவிப் பகிர்ந்தளிப்புக்களின் விளைவாக மொத்த அரசிறையும் கொடைகளும் ரூ. 478,770 இலட்சமாக விளங்கி 2 சத வீதமான சிறு வளர்ச்சியைப் பதிவு செய்தன. 1988 இல் வெளிநாட்டுக் கொடை களிலிருந்து வரவு செலவுத் திட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட மொத்தத் தொகையான ரூ. 57,280 இலட்சம் 1987 இனதைவிட 22 சதவீதம் உயர்வானதாகும். எனினும் வரவு செலவுத் திட்ட நோக்கங்களுக்காகப் பயன் படுத்தப்பட்ட வெளிநாட்டுக் கொடைகள் மொ.உ.உ. யின் விகிதாசாரமாக 1987 இன் 2.4 உடன் ஒப்பிடுகையில் 2.1 சதவீதமாக விளங்கியது.

1988 இல் ரூ. 212,120 இலட்சமாக விளங்கிய மூலதன செலவு 7 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தது. இதனால் 1986 இன் 13 சதவீதத்திலிருந்து 1987 இல் 11.6 சதவீதமாக வீழ்ச்சியடைந்த மூலதனச் செலவு/மொ.உ.உ. விகிதம் 1988 இல் 9.5 சதவீதத்திற்கு மேலும் வீழ்ச்சியுற்றது. இவ்வீழ்ச்சியானது பெரும் பாலும் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் நிலவிய அமைதியற்ற நிலைமைகளினால் இப்பிரதேசங்களுக்கென இலக்கிடப்பட்ட புத்தாக்க நிகழ்ச்சித் திட்டங்களை நடை முறைப்படுத்த இயலாமையினால் ஏற்பட்டது.

மீள் கொடுப்பனவுகள் நீங்கலான கடன் வழங்கல் உட்பட மொத்தச் செலவு ரூ. 760,030 இலட்சமாக விளங்கி 19 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. இதன்படி மொ.உ.உ. இற்கான செலவின் விகிதம் 1987 இன் 32.5 சதவீதத்திலிருந்து 1988 இல் 34.1 சதவீதமாக உயர்வடைந்தது. மொத்த செலவினத்தின் கணிசமான அதிகரிப்புக்கு எதிராக மூலதனச் செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி அரசின் நுகர்வு தொடர்பான செலவின் கணிசமான அதிகரிப்பைப் பிரதிபலிக்கின்றது.

அரசிறையினதும், செலவினதும் பாய்ச்சல்கள் ரூ. 338,540 இலட்சம் கொண்ட (கொடைக்கு முன்னர்) குறைவினைக் காட்டின. இது முன்னைய ஆண்டின் குறையினை ரூ. 121,050 இலட்சத்தால் விஞ்சியது. மொ.உ.உ. தொடர்பாக வரவு செலவுத் திட்ட நோக்கங்களுக்கான வெளிநாட்டுக் கொடைகளின் பயன்பாடு நிலையாகவுள்ளபோதிலும் ரூ. 281,260 இலட்சம் கொண்ட வரவு செலவுத் திட்டக் குறை (கொடைகளின் பின்னர்) 1988 இல் 65 சதவீதமான கணிசமான அதிகரிப்பைக் காட்டியது. இதன்படி குறை (கொடைகளுக்குப் பின்னர்) மொ.உ.உ. யின் விகிதாசாரமாக 1987 இன் 8.7 சதவீதத்திலிருந்து 1988 இல் 12.6 சதவீதத்திற்கு உயர்வடைந்தது.

பெருமளவுக்குச் சலுகை ரீதியான செயற்றிட்டக் கடன்களுடான வெளிநாட்டு மூலங்களிலிருந்து ரூ. 70,290 இலட்சம் கொண்ட தொகையொன்று பயன்படுத்தப்பட்டது. 1988 இல் வரவு செலவுத் திட்ட நோக்கத்திற்கான வெளிநாட்டுக் கடன்களின் பயன்பாடு முன்னைய ஆண்டில் பயன்படுத்தப்பட்ட தொகையினைவிட 23 சதவீதம் கூடுதலாகும். மொ.உ.உ. தொடர்பாக இது 1987 இன் 2.9 சதவீதத்திலிருந்து 1988 இல் 3.2 சதவீதத்திற்கு அதிகரித்தது.

இவ்வாண்டில் வெளிநாட்டு மூலங்களிலிருந்தான மூலவளப் பயன்பாடு அதிகரித்தபோதிலும் குறையினை நிதியிடுவதற்கு உள்நாட்டு மூலவளங்களின் மீது அதிகளவு தங்கியிருக்க நேரிட்டது. 1987 இன் ரூ. 64,000 இலட்சத்திற்கு எதிராக உள்நாட்டு வங்கியல்லாத்துறை குறை நிதியிடலுக்காக ரூ. 93,160 இலட்சத்தினை வழங்கியதுடன் மொ.உ.உ. இன் விகிதமாக இத்துறையின் பங்களிப்பு 1987 இன் 3.3 சதவீதத்திலிருந்து 1988 இல் 4.2 சதவீதத்திற்கு அதிகரித்தது. இதேவேளை, திறைசேரி வைப்புக்கணக்கு தொழிற்பாடுகள் உட்பட சந்தையல்லா மூலங்கள் ரூ. 27,030 இலட்சத்தை வழங்கின. எனினும் அதிகூடிய பங்களிப்பு 1988 இல் வரவு செலவுத் திட்ட மூலவள இடைவெளியினை நிரப்புவதற்காக ரூ. 90,780 இலட்சத்தினை வழங்கிய வங்கித்தொழில் முறையிலிருந்தே கிடைத்தது. வங்கிக் கடன்பாடுகளிலிருந்தான இத்தொகையின் அளவு அண்மைய ஆண்டுகளில் குறையினை நிதியிடும் நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட மிகக் கூடிய அளவாகும்.

இறை வெளிப்பாட்டின் தொகுப்பு அட்டவணை 1.41 இல் தரப்பட்டுள்ளது.

## அட்டவணை 1.41

## அரசின் இறைத்தொழிற்பாடுகளின் தொகுப்பு

ரூபா பத்து இலட்சம்

| விடயம் | 1982 | 1983 | 1984 | 1985 | 1986 | 1987 | 1988 ஒப்புதலளிக் கப்பட்ட மதிப் பீடுகள் | 1988 தற்காலிகம் | 1989 ஒப்புதலளிக் கப்பட்ட மதிப் பீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| மொத்த அரசிறையும் கொடைகளும் ... | 19,586 | 26,790 | 37,354 | 39,556 | 40,991 | 46,822 | 51,225 | 47,877 | 63,719 |
| மொத்த அரசிறை ... | 16,210 | 23,317 | 34,061 | 36,249 | 37,238 | 42,145 | 46,225 | 42,149 | 58,119 |
| வரி அரசிறை ... | 14,737 | 19,912 | 29,939 | 30,442 | 31,272 | 35,119 | 39,785 | 35,691 | 47,634 |
| வரியல்லா அரசிறை ... | 1,473 | 3,405 | 4,122 | 5,807 | 5,966 | 7,026 | 6,440 | 6,458 | 10,485 |
| கொடைகள் ... | 3,376 | 3,473 | 3,293 | 3,307 | 3,753 | 4,677 | 5,000 | 5,728 | 5,600 |
| செலவினமும் மீள்கொடுப்பனவைக் கழித்த கடன் வழங்கலும் ... | 33,512 | 39,637 | 47,837 | 55,234 | 59,193 | 63,894 | 72,534 | 76,003 | 92,322 |
| நடைமுறை ... | 18,341 | 22,002 | 24,630 | 32,645 | 33,966 | 39,560 | 40,548 | 48,180 | 56,600 |
| மூலதனம் ... | 15,427 | 15,863 | 19,915 | 21,530 | 23,236 | 22,816 | 27,017 | 21,212 | 29,038 |
| மீள்கொடுப்பனவைக் கழித்த கடன்வழங்கல் ... | — 256 | 1,772 | 3,292 | 1,059 | 1,991 | 1,518 | 4,969 | 6,611 | 6,684 |
| நடைமுறைக்கணக்குமிகை/ குறை (—) | — 2,131 | 1,315 | 9,431 | 3,604 | 3,272 | 2,585 | 5,677 | — 6,031 | 1,519 |
| வரவுசெலவுத்திட்டக்குறை (கொடைகளுக்குமுன்) ... | —17,302 | —16,320 | —13,776 | —18,985 | —21,956 | —21,749 | —26,309 | —33,854 | —34,203 |
| வரவுசெலவுத்திட்டக்குறை (கொடைகளுக்குப்பின்) ... | —13,926 | —12,847 | —10,483 | —15,678 | —18,203 | —17,072 | —21,309 | —28,126 | —28,603 |
| நிதியிடல் ... | 13,927 | 12,845 | 10,483 | 15,678 | 18,204 | 17,072 | 21,309 | 28,126 | 28,602 |
| வெளிநாட்டுக்கடன்பாடு ... | 4,744 | 6,312 | 6,492 | 7,109 | 9,061 | 5,716 | 12,520 | 7,029 | 12,004 |
| உள்நாட்டுக்கடன்பாடு ... | 9,183 | 6,533 | 3,991 | 8,569 | 9,143 | 11,356 | 8,789 | 21,097 | 16,598 |
| சந்தையல்லாக்கடன்பாடு ... | 1,487 | 1,977 | 951 | — 1,801 | — 669 | 1,415 | — | 2,703 | 0 |
| சந்தைக்கடன்பாடு ... | 7,696 | 4,556 | 3,040 | 10,370 | 9,812 | 9,941 | 8,789 | 18,394 | 16,598 |
| வங்கியல்லா ... | 4,020 | 4,082 | 5,135 | 5,659 | 6,765 | 6,400 | 6,213 | 9,316 | 13,203 |
| வங்கி ... | 3,676 | 474 | — 2,095 | 4,711 | 3,047 | 3,541 | 2,576 | 9,078 | 3,395 |

(தொடரும்)

அட்டவணை 1.41


## அரசின் இறைத் தொழிற்பாடுகளின் தொகுப்பு (மொ. உ உ. இன் சதவீதமாக)

(தொடர்ச்சி)

| விடயம் | 1982 | 1983 | 1984 | 1985 | 1986 | 1987 | 1988 ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் | 1988 தற்காலிகம் | 1989 ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| மொத்த அரசிறையும் கொடைகளும் ... ... | 19.8 | 22.0 | 24.3 | 24.4 | 22.8 | 23.8 | 22.6 | 21.5 | 24.0 |
| மொத்த அரசிறை ... ... | 16.3 | 19.2 | 22.2 | 22.3 | 20.8 | 21.4 | 20.4 | 18.9 | 21.9 |
| வரி அரசிறை ... ... | 14.9 | 16.4 | 19.5 | 18.7 | 17.4 | 17.9 | 17.6 | 16.0 | 17.9 |
| வரியல்லா அரசிறை ... ... | 1.5 | 2.8 | 2.7 | 3.6 | 3.3 | 3.6 | 2.8 | 2.9 | 4.0 |
| கொடைகள் ... ... | 3.4 | 2.9 | 2.1 | 2.0 | 2.1 | 2.4 | 2.2 | 2.6 | 2.1 |
| செலவினமும் மீள்கொடுப்பனவைக் கழித்த கடன் வழங்கலும் ... | 33.8 | 32.6 | 31.1 | 34.0 | 33.0 | 32.5 | 32.0 | 34.1 | 34.8 |
| நடைமுறை ... ... | 18.5 | 18.1 | 16.0 | 20.1 | 18.9 | 20.1 | 17.9 | 21.6 | 21.3 |
| மூலதனம் ... ... | 15.6 | 13.0 | 13.0 | 13.3 | 13.0 | 11.6 | 11.9 | 9.5 | 10.9 |
| மீள் கொடுப்பனவைக்கழித்த கடன் வழங்கல் ... | — 0.3 | 1.5 | 2.1 | 0.7 | 1.1 | 0.8 | 2.2 | 3.0 | 2.5 |
| நடைமுறைக்கணக்குமிகை/குறை (—) ... | — 2.1 | 1.1 | 6.1 | 2.2 | 1.8 | 1.3 | 2.5 | — 2.7 | 0.6 |
| வரவுசெலவுத்திட்டக்குறை (கொடைகளுக்கு முன்) ... | —17.4 | —13.4 | — 9.0 | —11.7 | —12.2 | —11.1 | —11.6 | —15.2 | —12.9 |
| வரவுசெலவுத்திட்டக்குறை (கொடைகளுக்குப்பின்) ... | —14.0 | —10.6 | — 6.8 | — 9.7 | —10.1 | — 8.7 | — 9.4 | —12.6 | —10.8 |
| நிதியிடல் ... ... | 14.0 | 10.6 | 6.8 | 9.7 | 10.1 | 8.7 | 9.4 | 12.6 | 10.8 |
| வெளிநாட்டுக்கடன்பாடு ... ... | 4.8 | 5.2 | 4.2 | 4.4 | 5.1 | 2.2 | 5.5 | 3.2 | 4.5 |
| உள்நாட்டுக்கடன்பாடு ... ... | 9.3 | 5.4 | 2.6 | 5.3 | 5.1 | 5.8 | 3.9 | 9.5 | 6.3 |
| சந்தையல்லாக்கடன்பாடு ... | 1.5 | 1.6 | 0.6 | — 1.1 | — 0.4 | 0.7 | 0.0 | 1.2 | 0.0 |
| சந்தைக்கடன்பாடு ... ... | 7.8 | 3.7 | 2.0 | 6.4 | 5.5 | 5.1 | 3.9 | 8.2 | 6.3 |
| வங்கியல்லா ... ... | 4.1 | 3.4 | 3.3 | 3.5 | 3.8 | 3.3 | 2.7 | 4.2 | 5.0 |
| வங்கி ... ... | 3.7 | 0.4 | — 1.4 | 2.9 | 1.7 | 1.8 | 1.1 | 4.1 | 1.3 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

## இறை அளவுகளின் போக்குகள்




இலங்கை மத்திய வங்கி

அரசிறை

1988 இல் அரசின் அரசிறை ரூ. 421,490 இலட்சமாக ஏறத்தாழ முன்னைய ஆண்டின் அதே தொகையாக விளங்கியது. வரி அரசிறை ரூ. 356,910 இலட்சமாக விளங்கி 2 சதவீதமான சிறு வளர்ச்சியைப் பிரதிபலித்ததுடன் இது முன்னைய ஆண்டின் பங்களிப்பான 83 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1988 இன் மொத்த அரசிறையில் 85 சதவீதத்திற்கு வகை கூறியது. உள்நாட்டுப் பொருட்களினதும் பணிகளினதும் மீதான வரிகள் முன்னைய ஆண்டின் 45 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் வரி அரசிறையில் 48 சதவீதத்தைக் கொண்டிருந்தன. இதேவேளை பன்னாட்டு வர்த்தகம் சார்பான வரிகள் 1987 இன் வரி அரசிறையின் 37 சதவீதத்திலிருந்து 1988 இல் 35 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன. மொத்த வரி அரசிறையில் வருமான வரிகளின் பங்கு 1987 இன் 14 சதவீதத்திலிருந்து 1988 இல் 13 சதவீதத்திற்ச் சிறிதளவால் வீழ்ச்சியடைந்த வேளையில் சொத்துக்களின் கொடுக்கல் வாங்கல்கள் மீதான வரிகளிலிருந்தான அரசிறை முன்னைய ஆண்டைப்போலவே 4 சதவீதமாக மாறாதிருந்தது. மத்திய வங்கியின் இலாப மாற்றல்கள் தொலைத் தொடர்புத் திணைக்களத்தின் தொழிற்படு மிகை, வட்டி வருமானம் என்பன 1988 இல் வரியல்லா அரசிறையின் மிகப் பெரிய மூலங்களாகத் தொடர்ந்தும் விளங்கின. இம்மூன்று மூலங்களும் சேர்ந்து 1987 இன் 62 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1988 இன் வரியல்லா அரசிறையில் ஏறத்தாழ 69 சதவீதத்திற்குப் பங்களித்தன.

பொருட்கள், பணிகள் மீதான உள்நாட்டு வரிகளிலிருந்தான பெறுகைகள் முன்னைய ஆண்டின் 6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1988 இல், ரூ. 170,630 இலட்சமாக விளங்கி 9 சதவீத அதிகரிப்பைக் காட்டின. நாட்டில் நிலவும் அமைதியற்ற நிலைமைகளின் மத்தியிலும் பொருட்கள், பணிகள் மீதான உள்நாட்டு வரிகளிலிருந்தான அரசிறை உயர்ந்த விலைகளினதும், கலால் தீர்வைகள் தெரிந்தெடுக்கப்பட்ட விடயங்களின் மீதான மொத்த விற்பனை வரி வீதங்கள் என்பன மேனோக்கித் திருத்தியமைக்கப்பட்டதனதும் காரணமாக ஓரளவு முன்னேற்றத்தைக் காட்டியது. உள்நாட்டுப் பொருட்கள் பணிகளென்பவற்றிலிருந்தான மொத்த வரி அரசிறையில் ஏறத்தாழ நாலில் மூன்று பங்கிற்கு வகை கூறும் மொத்த விற்பனை வரிகளிலிருந்தான அரசிறைச் சேகரிப்பு முன்னைய ஆண்டின் 5 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 16 சதவீதத்தால் உயர்வடைந்தது. தயாரிப்பு நடவடிக்கைகளின் வெளியீடுகளின் பெறுமதியில் 11 சதவீத வளர்ச்சி காணப்பட்டபோதிலும் இந்நடவடிக்கைகளிலிருந்தான மொத்த விற்பனை வரிச் சேகரிப்பு முன்னைய ஆண்டின் 12 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தது. இந் நடவடிக்கைகளிலிருந்தான அரசிறைச் சேகரிப்பில் ஏற்பட்ட வீழ்ச்சி இத் தயாரிப்பாளர்களது திரவநிலை குழப்பத்தினால் பாதிக்கப்பட்டமையின் காரணமாக அவர்களுக்கு வழங்கப்பட்ட கால நீடிப்பின் விளைவாக ஏற்பட்டதாகும். 1988 இல் பணிகள் துறையில் குறிப்பாக வங்கித்தொழில், நிதி போன்றவற்றில் திருப்திகரமான செயலாற்றத்தைப் பிரதிபலிக்கும் வகையில் தயாரிப்பு அல்லாத நடவடிக்கைகளிலிருந்தான மொத்த விற்பனை வரிச் சேகரிப்பு 39 சதவீதத்தால் அதிகரித்தது. இவ்வாண்டில் இறக்குமதிகளின் பெறுமதியில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பின் விளைவாக இறக்குமதிகள் மீதான மொத்த விற்பனை வரிகளிலிருந்தான வருவாய் 18 சதவீத அதிகரிப்பைக் காட்டியது.

1988 இல் கலால் வரிகளிலிருந்தான அரசிறை ரூ. 44,430 இலட்சமாக விளங்கி உள்நாட்டுப் பொருட்கள், பணிகளிலிருந்தான வரி அரசிறையில் ஏறத்தாழ நாலில் ஒரு பங்கிற்கு வகை கூறியது. புகையிலை மீதான கலால் தீர்வைகளில் மேன்னோக்கிய திருத்தங்கள் செய்யப்பட்டபோதிலும் இம் மூலத்திலிருந்தான அரசிறைச் சேகரிப்புக்கள் தொழிலாளர் தகராறுகள், நாட்டின் அமைதியற்ற நிலைகள் என்பன காரணமாக விற்பனைகளின் அளவில் வீழ்ச்சி ஏற்பட்டதன் விளைவாக 15 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தது. எனினும், மதுபானம் மீதான கலால் தீர்வையிலிருந்தான அரசிறைச் சேகரிப்பு ரூ. 18,390 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டின் 11 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 12 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. இவ்வதிகரிப்புக்கு இவ்வாண்டில் தீர்வை வீதங்களில் செய்யப்பட்ட மேல்நோக்கிய திருத்தங்களே முழுமையான காரணமாகும்.

1988 இல் பன்னாட்டு வர்த்தகம் சார்பான வரிகள் மூலமாகப் பெறப்பட்ட அரசிறை ரூ. 124,420 இலட்சமாக விளங்கியது. இது முன்னைய ஆண்டின் 17 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 4 சதவீத வீழ்ச்சியாகும். 1988 இல் இறக்குமதி அளவுகளில் அதிகரிப்புக் காணப்பட்டபோதிலும் உந்து ஈருருளிகள், உந்து இசுக்கூட்டர், மதுபானம், புகையிலை, சீமெந்து போன்ற தெரிந்தெடுக்கப்பட்ட விடயங்களின் மீதான தீர்வைகளின் கீழ்நோக்கிய திருத்தங்களின் காரணமாகவும் கோதுமைத் தானியம், பால்மா, பருப்பு போன்ற சில அத்தியாவசிய நுகர்வுப் பொருட்கள் இறக்குமதித் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்பட்டமை காரணமாகவும் 1988 இல் இறக்குமதித் தீர்வைகள் மூலமான அரசிறை ரூ. 106,100 இலட்சமாக விளங்கி 4 சதவீத வீழ்ச்சியைக் காட்டியது. அதன்படி சராசரி இறக்குமதித் தீர்வை வீதம் 1987 இன் 18 சதவீதத்திலிருந்து 1988 இல் 15 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. ஏற்றுமதிகளை அடிப்படையாகக் கொண்ட வரிகள் ரூ. 18,320 இலட்சத்தினை வழங்கி முன்னைய ஆண்டில் சேகரிக்கப்பட்ட தொகையினைவிட 5 சதவீத வீழ்ச்சியைப் பிரதிபலித்தன. தேயிலை ஏற்றுமதிகள் மீதான குறிப்பிடப்பட்ட தீர்வைகளிலிருந்தான அரசிறையானது தீர்வை வீதங்கள் குறைவடைந்தமை காரணமாக 32 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்த வேளையில் இறப்பர் மீதான ஏற்றுமதித் தீர்வைகளிலிருந்தான சேகரிப்பு சாதகமான விலைகள் காரணமாக 59 சதவீதத்தால் அதிகரித்தது. இதேவேளை தேங்காய் மீதான ஏற்றுமதித் தீர்வையிலிருந்தான அரசிறை முக்கியமாக இவ்வாண்டில் ஏற்றுமதிகளின் அளவு வீழ்ச்சியடைந்தமையின் விளைவாக 55 சதவீதம் கொண்ட கணிசமான வீழ்ச்சியைப் பதிவு செய்தது.

கூட்டு, தனியாள் ஆகிய இரண்டு வரி செலுத்துவோர்களினதும் வருமான வரிகளிலிருந்தான அரசிறை ரூ. 47,460 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டின் அரசிறையான ரூ. 49,090 இலட்சத்தினைவிட 3 சதவீதமான சிறு வீழ்ச்சியைப் பதிவு செய்தது. 1988 இல் வருமானவரிச் சேகரிப்புக்களின் வீழ்ச்சிக்கு நாட்டில் குறிப்பாக ஆண்டின் இறுதிக் காலாண்டில் நிலவிய அமைதியற்ற நிலைமைகளினால் சேகரிப்பில் ஏற்பட்ட தாக்கங்களே பெருமளவுக்குக் காரணமாகும்.

அரசின் அரசிறையின் புள்ளி விபரத் தொகுப்பு அட்டவணை 1.42 இல் தரப்பட்டுள்ளது.

# அட்டவணை 1.42

## கூறுகளின்படி அரசிறைத் தொகுப்பு

ரூபா பத்து இலட்சம்

| விடயம் | 1982 | 1983 | 1984 | 1985 | 1986 | 1987 | 1988 ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் | 1988 தற்காலிக மாலைவை | 1989 ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வரி அரசிறை ... ... | 14,737 | 19,912 | 29,939 | 30,442 | 31,272 | 35,119 | 39,785 | 35,691 | 47,634 |
| வருமானவரிகள் ... ... | 2,923 | 3,366 | 5,480 | 5,586 | 4,787 | 4,909 | 4,865 | 4,746 | 5,977 |
| தனியார் ... ... | 808 | 891 | 1,760 | 1,424 | 1,513 | 1,580 | 1,440 | 1,532 | 1,767 |
| கூட்டு ... ... | 2,115 | 2,475 | 3,720 | 4,162 | 3,274 | 3,329 | 3,425 | 3,214 | 4,210 |
| சொத்துக்கள் மீதான வரிகள் ... ... | 322 | 397 | 489 | 499 | 648 | 1,568 | 1,553 | 1,440 | 2,370 |
| பொருட்கள் பணிகள் மீதான வரிகள் ... ... | 6,320 | 8,710 | 10,888 | 13,359 | 14,787 | 15,667 | 18,707 | 17,063 | 22,072 |
| பொது விற்பனை, மொத்த விற்பனை வரி ... | 4,052 | 6,224 | 8,143 | 10,189 | 10,088 | 10,611 | 12,450 | 12,301 | 14,560 |
| தயாரிப்பு ... ... | 1,806 | 2,718 | 3,045 | 3,768 | 3,270 | 3,675 | 3,740 | 3,615 | 4,811 |
| தயாரிப்பல்லாத ... ... | 1,524 | 1,891 | 1,928 | 2,590 | 2,415 | 2,426 | 2,910 | 3,375 | 3,330 |
| இறக்குமதிகள் ... ... | 722 | 1,615 | 3,170 | 3,831 | 4,403 | 4,510 | 5,800 | 5,311 | 6,419 |
| கலால் வரி ... ... | 2,123 | 2,298 | 2,551 | 2,982 | 4,414 | 4,716 | 5,922 | 4,443 | 7,132 |
| குடிவகை ... ... | 808 | 867 | 1,013 | 1,104 | 1,485 | 1,644 | 2,040 | 1,839 | 2,328 |
| புகையிலை ... ... | 1,315 | 1,431 | 1,537 | 1,877 | 2,927 | 3,071 | 3,880 | 2,603 | 4,802 |
| உரிமக்கட்டணங்கள் ... ... | 145 | 188 | 194 | 188 | 285 | 340 | 335 | 319 | 380 |
| பன்னாட்டுவர்த்தகத்தின் மீதான வரிகள் ... | 5,172 | 7,439 | 13,082 | 10,998 | 11,050 | 12,975 | 14,660 | 12,442 | 15,915 |
| இறக்குமதிகள்1 ... ... | 2,538 | 4,047 | 6,670 | 8,093 | 9,414 | 11,051 | 12,445 | 10,610 | 13,900 |
| ஏற்றுமதிகள் ... ... | 2,634 | 3,392 | 6,412 | 2,905 | 1,636 | 1,924 | 2,215 | 1,832 | 2,015 |
| தேயிலை ... ... | 1,594 | 2,222 | 5,004 | 2,214 | 996 | 1,152 | 1,305 | 875 | 470 |
| இதில் பெறுமான விகிதவரி ... ... | 150 | 932 | 3,236 | 1,032 | 62 | 262 | 550 | 267 | 200 |
| இறப்பர் ... ... | 753 | 852 | 1,009 | 254 | 307 | 530 | 725 | 842 | 1,250 |
| தெங்கு ... ... | 191 | 241 | 297 | 342 | 232 | 148 | 110 | 67 | 125 |
| ஏனைய ஏற்றுமதிகள் ... ... | 96 | 77 | 102 | 95 | 101 | 94 | 75 | 48 | 170 |
| வேறெங்கும் வகைப்படுத்தப்படாத ஏனைய வரிகள் ... | — | — | — | — | — | — | — | — | 1,300 |
| வரியல்லா அரசிறை ... ... | 1,473 | 3,405 | 4,122 | 5,807 | 5,966 | 7,026 | 6,440 | 6,458 | 10,485 |
| சொத்து வருவாய்' ... ... | 777 | 2,605 | 3,085 | 3,926 | 4,731 | 4,541 | 4,556 | 4,575 | 6,530 |
| இதில் மத்திய வங்கி இலாபங்கள் ... ... | — | 1,500 | 1,650 | 1,500 | 1,779 | 1,723 | 1,650 | 1,650 | 3,700(அ) |
| வட்டிவருவாய் ... ... | 243 | 492 | 367 | 1,186 | 1,560 | 1,404 | 1,150 | 1,451 | 1,326 |
| வர்த்தக முயற்சிகளின் மிகை ... ... | 327 | 356 | 692 | 666 | 803 | 1,229 | 1,638 | 1,338 | 1,375 |
| கட்டணங்களும் விதிப்புக் கட்டணங்களும் ... | 186 | 202 | 265 | 364 | 347 | 344 | 460 | 390 | 597 |
| ஏனைய வரியல்லா அரசிறை2 ... ... | 510 | 597 | 772 | 1,517 | 888 | 2,151 | 1,424 | 1,493 | 3,358 |
| மொத்த அரசிறை ... ... | 16,210 | 23,317 | 34,061 | 36,249 | 37,238 | 42,145 | 46,225 | 42,149 | 58,119 |

1. இறக்குமதித் தீர்வைத் தள்ளுபடிகள் நீங்கலாக.
2. மூலதனப் பொருட்களின் விற்பனைகள் உட்பட.

(அ) மத்திய வங்கியினால் வைத்திருக்கப்பட்ட திறைசேரி உண்டியல்கள் மீதான மீளளிப்பற்ற வரியான ரூ. 17,000 இலட்சம் கொண்ட தொகையும் உள்ளடங்கும்.

(தொடரும்)

## அட்டவணை 1.43

### செலவு, மீள் கொடுப்பனவுகளைக் கழித்த கடன் வழங்கல் என்பவற்றின் பொருளாதார பகுப்பாய்வு

ரூபாபத்து இலட்சம்

| விடயம் | 1982 | 1983 | 1984 | 1985 | 1986 | 1987 | 1988 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் | 1988 தற்காலிகம் | 1989 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **நடைமுறைச் செலவு ... ...** | **18,341** | **22,002** | **24,630** | **32,645** | **33,967** | **39,560** | **40,548** | **48,180** | **56,682** |
| பொருட்கள் பணிகள் மீதான செலவு ... | 6,500 | 7,848 | 9,195 | 16,287 | 15,155 | 18,466 | 19,129 | 21,916 | 24,329 |
| சம்பளங்களும் கூலிகளும் ... ... | 4,561 | 4,811 | 5,554 | 6,878 | 8,028 | 8,006 | 10,001 | 10,086 | 12,437 |
| ஏனைய பொருட்களும் பணிகளும் ... ... | 1,940 | 3,037 | 3,642 | 9,409 | 7,127 | 10,460 | 9,128 | 11,830 | 11,892 |
| வட்டிக்கொடுப்பனவுகள் ... ... | 5,104 | 6,606 | 6,738 | 7,428 | 8,762 | 10,157 | 11,962 | 12,745 | 13,499 |
| வெளிநாடு ... ... | 915 | 1,270 | 1,623 | 1,970 | 2,209 | 2,564 | 3,199 | 3,305 | 3,265 |
| உள்நாடு ... ... | 4,189 | 5,336 | 5,115 | 5,458 | 6,553 | 7,593 | 8,763 | 9,440 | 10,234 |
| மாற்றல் கொடுப்பனவுகள் ... ... | 6,736 | 7,548 | 8,697 | 8,929 | 10,050 | 10,937 | 10,497 | 13,519 | 20,385 |
| அரச முயற்சிகள் ... ... | 1,232 | 1,768 | 1,762 | 882 | 2,350 | 1,722 | 1,736 | 2,189 | 2,532 |
| அரசின் ஏனைய மட்டங்கள் ... ... | 317 | 388 | 444 | 501 | 600 | 609 | 833 | 833 | 939 |
| குடியிருப்பாளர்கள் ... ... | 5,187 | 5,392 | 6,491 | 7,546 | 7,100 | 8,606 | 7,928 | 10,497 | 16,914 |
| குறைச் செலவு ... ... | — | — | — | — | — | — | 1,040 | — | — 1,531 |
| **மூலதனச் செலவு ... ...** | **15,427** | **15,863** | **19,915** | **21,530** | **23,236** | **22,816** | **27,017** | **21,212** | **25,960** |
| நிலையான சொத்துக்களின் கொள்வனவு, கட்டடவாக்கம் பேணல் ... ... | 4,829 | 5,375 | 5,849 | 7,375 | 7,788 | 10,970 | 15,532 | 7,148 | 13,716 |
| மூலதன மாற்றல்கள் ... ... | 10,598 | 10,488 | 14,066 | 14,155 | 15,488 | 11,846 | 11,489 | 14,064 | 11,311 |
| அரச முயற்சிகள் ... ... | 10,591 | 10,422 | 13,681 | 13,441 | 14,874 | 11,198 | 10,729 | 13,203 | 9,429 |
| அரசின் ஏனைய மட்டங்கள் ... ... | 167 | 317 | 198 | 481 | 472 | 571 | 672 | 773 | 1,689 |
| ஏனையவை ... ... | 15 | 11 | 44 | 26 | 101 | 77 | 88 | 88 | 193 |
| ஏனையவை ... ... | -- 176 | — 262 | 143 | 207 | — | 0 | 0 | 0 | 2,800 |
| குறைச் செலவு ... ... | — | — | — | — | — | — | 4 | — | 1,867 |
| **மீள் கொடுப்பனவுகளைக் கழித்த கடன் வழங்கல் ...** | **— 256** | **1,772** | **3,292** | **1,059** | **1,991** | **1,518** | **4,969** | **6,611** | **7,009** |
| முற்பணக் கணக்குகள் ... .. | — 879 | 1,120 | 2,917 | 314 | — 170 | —1,180 | 100 | 1,750 | 400 |
| கூட்டுத்தாபனங்களுக்கான கடன் வழங்கல் ... | 720 | 801 | 901 | 997 | 2,669 | 3,159 | 5,324 | 5,324 | 7,160 |
| கடன்களின் மீள் கொடுப்பனவு ... .. | 97 | — 149 | — 526 | — 252 | — 508 | — 461 | — 455 | — 463 | — 551 |
| மொத்தச் செலவும் மீள்கொடுப்பனவைக் கழித்த கடன் வழங்கலும் ... ... | 33,512 | 39,637 | 47,837 | 55,234 | 59,194 | 63,894 | 72,534 | 76,003 | 89,651 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

## அட்டவணை 1.44

### உடமையாளரின்படி வெளிநிற்கும் அரசின் படுகடன்

| விடயம் | தொகை (பத்து இலட்சம் ரூபாயில்) | | | | | வெளிநின்ற தொகையின் சதவீத மாற்றம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1984 | 1985 | 1986 | 1987 | 1988* | 1984 | 1985 | 1986 | 1987 | 1988* |
| 1. உள்நாடு ... ... | 51,651 | 62,611 | 69,499 | 78,997 | 98,594 | — 0.2 | 21.2 | 11.0 | 13.7 | 24.8 |
| 1.1 சந்தை ... ... | 51,555 | 62,492 | 69,352 | 78,816 | 98,432 | ... | 21.2 | 11.0 | 13.6 | 24.9 |
| 1.1.1 வங்கியல்லா ... | 33,783 | 37,338 | 42,159 | 48,312 | 56,085 | 9.0 | 10.5 | 12.9 | 14.6 | 16.1 |
| 1.1.2 வங்கி ... ... | 17,772 | 25,154 | 27,193 | 30,504 | 42,347 | —13.6 | 41.5 | 8.1 | 12.2 | 38.8 |
| 1.2 சந்தையல்லா ... ... | 96 | 119 | 147 | 181 | 162 | —51.0 | 23.3 | 24.0 | 22.8 | —10.5 |
| 2. வெளிநாடு ... ... | 53,681 | 67,673 | 86,208 | 111,812 | 124,408 | 16.6 | 26.1 | 27.4 | 29.7 | 11.2 |
| 2.1 பல்புடை ... ... | 16,131 | 19,512 | 23,983 | 31,113 | 36,079 | 25.7 | 21.0 | 22.9 | 29.7 | 15.9 |
| 2.2 இருபுடை ... ... | 30,181 | 39,956 | 53,176 | 69,722 | 78,209 | 9.5 | 32.4 | 33.1 | 31.1 | 12.2 |
| 2.3 நிதிச்சந்தைகள்... ... | 7,369 | 8,205 | 9,049 | 10,976 | 10,120 | 31.1 | 11.3 | 10.3 | 21.3 | — 7.8 |
| மொத்தம் ... ... | 105,332 | 130,284 | 155,707 | 190,809 | 223,002 | 7.7 | 23.7 | 19.5 | 22.5 | 16.9 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 1.45


### படுகடன் மூலங்களின்படி அரச படுகடன்

| விடயம் | வெளி நிற்கும் தொகை (பத்து இலட்சம் ரூபாய்களில்) | | | | | வெளிநிற்கும் தொகையின் சதவீத மாற்றம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1984 | 1985 | 1986 | 1987 | 1988* | 1984 | 1985 | 1986 | 1987 | 1988* |
| 1. உள்நாட்டுப் படுகடன் ... | 51,652 | 62,611 | 69,499 | 78,997 | 98,594 | — 0.2 | 21.2 | 11.0 | 13.7 | 24.8 |
| 1.1 நடுத்தர நீண்டகால படுகடன் ... | 33,324 | 36,689 | 39,277 | 45,138 | 49,959 | 3.7 | 10.1 | 7.1 | 14.9 | 10.7 |
| 1.1.1 ரூபாக் கடன்கள் ... | 33,228 | 36,570 | 39,130 | 44,957 | 49,797 | 4.0 | 10.1 | 7.0 | 14.9 | 10.8 |
| 1.1.2 நிருவாகக் கடன்கள் ... | 96 | 119 | 147 | 181 | 162 | — 51.0 | 23.4 | 23.9 | 23.1 | — 10.5 |
| 1.2 குறுங்காலப் படுகடன் ... | 18,328 | 25,922 | 30,222 | 33,859 | 48,635 | — 6.6 | 41.4 | 16.6 | 12.0 | 43.6 |
| 1.2.1 திறைசேரி உண்டியல்கள் ... | 14,860 | 22,280 | 26,173 | 29,850 | 43,700 | — 14.6 | 49.9 | 17.5 | 14.0 | 46.4 |
| 1.2.2 வரி ஒதுக்குச் சான்றிதழ்கள் ... | 10 | 9 | 9 | 9 | 9 | — 3.0 | — 10.0 | — | — | — |
| 1.2.3 மத்திய வங்கியின் முற்பணங்கள் ... | 3,458 | 3,633 | 4,040 | 4,000 | 4,926 | 56.5 | 5.1 | 11.2 | — | 23.1 |
| 2. வெளிநாட்டுப் படுகடன் ... | 53,681 | 67,673 | 86,208 | 111,812 | 124,408 | 16.6 | 26.1 | 27.4 | 29.7 | 11.2 |
| 2.1 செயற்றிட்டக் கடன்கள் ... | 25,971 | 36,406 | 50,418 | 72,945 | 85,176 | 33.0 | 40.2 | 38.5 | 44.7 | 16.8 |
| 2.2 பண்டம் ... | 18,426 | 22,373 | 27,766 | 32,682 | 35,206 | 3.0 | 21.4 | 24.1 | 17.7 | 7.7 |
| 2.3 ஏனையவை ... | 9,284 | 8,894 | 8,024 | 6,185 | 4,026 | 7.9 | — 4.2 | — 9.8 | — 22.9 | — 34.9 |
| மொத்தம் ... | 105,333 | 130,284 | 155,707 | 190,809 | 223,002 | 7.7 | 23.7 | 19.5 | 22.5 | 16.9 |

* தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி.


## அரச படுகடனின் உள்ளடக்கம்




இலங்கை மத்திய வங்கி

* கடன்கரைப்பு நிதியங்கள் நீங்கலாக அரச மொத்தப் படுகடன்.

## உள்நாட்டுப் படுகடனின் உள்ளடக்கம்




இலங்கை மத்திய வங்கி.


* கடன்கரைப்பு நிதியங்கள் நீங்கலாக மொத்த உள்நாட்டுப் படுகடன்

1988 இல் மத்திய வங்கியின் தற்காலிக முற்பணங்கள் மூலமான அரசின் கடன்பாடுகள் ரூ. 9,260 இலட்சமாக விளங்கின. இதன்படி இக்கணக்கில் வெளிநிற்கும் பொறுப்பு முன்னைய ஆண்டு இறுதியின் ரூ. 40,000 இலட்சத்தி லிருந்து 1988 இறுதியில் ரூ. 49,260 இலட்சத்திற்கு உயர்வடைந்தது.

வெளிநிற்கும் வெளிநாட்டுப் படுகடன் ரூ. 1,244,080 இலட்சமாக விளங்கி 1987 இறுதியில் வெளிநிற்கும் படுகடனுன ரூ. 1,118,120 இலட்சத்தினைவிட 11 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. மொத்தப் படுகடனில் வெளிநாட்டுப் படுகடனின் பங்கு, வெளிநாட்டுப் படுகடனின் சார்பு ரீதியாக மெதுவான வளர்ச்சியைப் பிரதிபலிக்கும் வகையில் 1987 இன் 59 சதவீதத்திலிருந்து 1988 இல் 56 சதவீதத்திற்குச் சிறிதளவால் வீழ்ச்சியுற்றது. இவ்வாண்டில் வரவு செலவுத் திட்ட நோக்கங்களுக்கான தேறிய வெளிநாட்டுக் கடன்பாடுகள், ரூ. 70,290 இலட்சமாக விளங்கியபோதிலும் செலாவணிவீத வேறுபாடுகளின் விளைவாக ஏற்பட்ட ரூ. 55,460 இலட்சம் கொண்ட மேலதிக பொறுப்பொன்றின் காரணமாக ஆண்டின் இறுதியில் வெளிநிற்கும் வெளிநாட்டுப் படுகடன் ரூ. 125,750 இலட்ச அதிகரிப்பைக் காட்டியது. வெளிநிற்கும் பல்புடைக் கடன்கள் மொத்த வெளிநாட்டுக் கடன்களில் 29 சதவீதத்திற்கு வகை கூறி ரூ. 360,790 இலட்சத்திற்கு 16 சதவீதத்தால் அதிகரித்தது. இதேவேளை இருபுடைக் கடன்கள் தொடர்பான வெளிநிற்கும் கடன்பாடான ரூ. 782,090 இலட்சம் 12 சதவீத அதிகரிப்பைப் பிரதிபலித்தது. ஆண்டு இறுதியில் வெளி நிற்கும் வெளிநாட்டுக் கடன்பாடுகளில் 63 சதவீதத்தை இருபுடைக் கடன்கள் கொண்டிருந்தன.

வெளிநிற்கும் வெளிநாட்டுப் படுகடன் ரூ. 851,760 இலட்சம் கொண்ட செயற்றிட்டக் கடன்களையும் ரூ. 392,320 இலட்சம் கொண்ட செயற்றிட்ட மல்லாக் கடன்களையும் கொண்டிருந்தது. இதனால், வெளிநிற்கும் செயற்றிட்டக் கடன்கள் முன்னைய ஆண்டின் இறுதியில் வெளிநிற்கும் இவை தொடர்பான பொறுப்புக்களினைவிட 17 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தவேளையில் செயற்றிட்ட மல்லாக் கடன்கள் 1 சதவீதத்தால் மட்டுமே அதிகரித்தன. இவ்வாண்டில் செயற்றிட்டக் கடன்கள் மூலமாகப் பயன்படுத்தப்பட்ட தேறிய மூலவளங்கள் ரூ. 86,460 இலட்சமாக விளங்கியபோதிலும் செலாவணி வீத வேறுபாட்டின் காரணமாக ஏற்பட்ட ரூ. 35,850 இலட்சம் கொண்ட மேலதிகப் பொறுப்பின் விளைவாகச் செயற்றிட்டக் கடன்கள் மீதான வெளிநிற்கும் பொறுப்பு ரூ. 122,310 இலட்சத்தால் உயர்வடைந்தது. இதேவேளை செயற்றிட்டமல்லாக் கடன்களின் கீழான கொடுக்கல் வாங்கல்கள் ரூ. 16,380 இலட்சம் கொண்ட தேறிய மீள் கொடுப்பனவை விளைவித்தபோதும் இக் கணக்கின்மீது வெளிநிற்கும் பொறுப்பு செலாவணி வீத மாற்றங்களின் விளைவாக ஏற்பட்ட ரூ. 19,830 இலட்சம் கொண்ட மேலதிகப் பொறுப்பின் காரணமாக ரூ. 3,650 இலட்சத் தால் உயர்வடைந்தது.

## வெளிநாட்டுப் படுகடனின் உள்ளடக்கம்




இலங்கை மத்திய வங்கி.

**அரச படுகடன் பணிக் கொடுப்பனவுகள்**

1988 இல் கடன் தீர்ப்பனவையும் வட்டிக் கொடுப்பனவுகளையும் உள்ளடக்கிய படுகடன் பணிக் கொடுப்பனவுகள் ரூ. 227,690 இலட்சமாக விளங்கின. இது 1987 இனைவிட 42 சதவீத அதிகரிப்பைப் பிரதிபலித்தது. இதனுல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதாசாரமாக அரச படுகடன் மீதான மொத்தப் பணிக் கொடுப்பனவுகள் 1987 இன் 8 சதவீதத்திலிருந்து 1988 இல் 10 சத வீதத்திற்கு உயர்வடைந்தது.

வெளிநாட்டுக் கடன்கள் மீதான கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் ரூ. 52,350 இலட்சமாக விளங்கி 12 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தவேளை யில் வட்டிக் கொடுப்பனவுகள் ரூ. 32,620 இலட்சமாக விளங்கி 32 சதவீத அதிகரிப்பைக் காட்டின. இதன்படி வெளிநாட்டுப் படுகடன் மீதான மொத்தப் பணிக் கொடுப்பனவுகள் ரூ. 84,970 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டினை விட 17 சதவீத அதிசரிப்பைப் பதிவு செய்தன.

உள்நாட்டுப் படுகடன் தொடர்பான மீள் கொடுப்பனவுகள் 1987 இன் ரூ. 9,020 இலட்சத்திலிருந்து ரூபாக் கடன் நிகழ்ச்சித் திட்டத்திலுள்ள சீரற்ற முதிர்ச்சித் தன்மையின் விளைவாக ரூ. 47,750 இலட்சத்திற்கு உயர்வுற்றன. பெரும்பாலும் திறைசேரி உண்டியல்கள் மூலமான அதிகளவு தொகையான உள் நாட்டுக் கடன்பாடுகளினுல் பெருமளவு தொகை பெறப்பட்டமையினுல் உள் நாட்டுப் படுகடன் மீதான வட்டிக் கடப்பாடு ரூ. 94,550 இலட்சமாக விளங்கி 1988 இல் 18 சதவீத அதிகரிப்பினைப் பிரதிபலித்தது. இதனுல் 1988 இல் உள்நாட்டுப் படுகடன் மீதான மொத்தப் பணிக் கொடுப்பனவுகள் 59 சதவீத அதிகரிப்பைக் காட்டின.